**2026.02.25** ***சுற்றறிக்கை இல: 17/2026***

அனைத்து மாவட்ட ஆணையாளர்களுக்கும்
உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கும் (பயிற்சி)

**குருளை சாரணர் தலைவர் – தரு சின்னப் பயிற்சி**

**93வது கலைக்கூறு ஐஏ குருளை சாரணர் தலைவர்களுக்கான உயர் கற்கைநெறி 2026 ஏப்ரில் மாதம் 21 - 26ஆம் திகதி வரை மீரிகம லீ தசநாயக்க சாரணர் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.**

**குருளை சாரணர்** பிரிவில் கலைக்கூறு ஐஐஐ சிறந்த முறையில் நிறைவு செய்தஇ **குருளை சாரணர்** தலைவர்களுக்கான **குருளை சாரணர்** பிரிவின் கலைக்கூறு ஐஏ உயர் கற்கைநெறியை **2026 ஏப்ரில் மாதம் 21ஆம்** திகதி முதல் **26ஆம்** திகதி வரை பயிற்சித் தலைவர் **கே.க.பாரதி** அவர்களின் கண்காணிப்பின் கீழ் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை முறையாக பூர்த்தி செய்துஇ **2026 மார்ச் மாதம் 13 ஆம்** திகதிக்கு முன்னர் தேசிய சாரணர் சங்கத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

- நேர்முகத் தேர்வு - **2026 மார்ச் மாதம் 18ஆம்** திகதி **முற்பகல் 10.00 மணிக்கு** தேசிய சாரணர் தலைமையகத்தில் இடம்பெறவிருக்கும் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பதாரிகள் அனைவரும் முழுமையான சாரணர் சீருடையில் வருகை தருதல் வேண்டும்.
- கற்கைநெறிக்கான கட்டணம் – **5,500/=** ரூபாவாகும்
- **கலைக்கூறு IV குருளை சாரணர் தலைவர்களுக்கான உயர் கற்கை நெறியில் பங்கேற்பதற்கான தகைமைகள்:**

  I. கலைக்கூறு III ஐ சிறந்த முறையில் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
  II. 2025 ஆண்டுக்கான நியமன ஆணைப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும் அல்லது 2025ஆம் ஆண்டு புதுபிப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
  III. இதற்கு முன் கலைக்கூறு ஐஏ பயிற்சியொன்றினைக் கற்றவராயின்இ அப் பிரிவில் தரு சின்னத்தை வென்றெடுத்துஇ 02 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **நேர்முகத் தேர்வின்போது கொண்டுவரப்பட வேண்டியவை:-**

1. அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு
2. நியமன ஆணைப்பத்திரத்தின் பிரதி
3. சாரணர் தலைவர் முன்னேற்ற பயிற்சி அறிக்கை (1-5 புத்தகம்) முழுமைப்படுத்தி எடுத்து வருதல் வேண்டும்.

4. கலைக்கூறு 2இன் சான்றிதழ் (கலைக்கூறு 2இன் பின்னர் ஆறு மாதம் சேவைக் காலம் இருத்தல் வேண்டும்)
5. 05 நாட்கள் தங்கியிருந்து பயிற்சி பெறக்கூடிய வகையில் தேவையான ஆரோக்கியமான உடல்நலத்துடன் இருப்பதை உறுதி செய்யும் மருத்துவச் சான்றிதழ்.
6. அன்றைய தினம் நேர்முகத் தேர்வில் சித்திபெற்றால் கட்டணம் செலுத்த தயாராக வரவும்.

➢ **கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்:**

❖ நியமன ஆணைப்பத்திரம் இன்றி எவரும் கற்கைநெறிக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
❖ கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அறிவித்தல் ஒன்றைச் செய்து பங்குபற்றாதவர்களுக்கு மாத்திரம் கட்டணத்திலிருந்து 75 % மீள் செலுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்பதை அறியத்தருகிறோம்.

இது தொடர்பான மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்கு குறித்த காலத்திற்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.
இங்ஙனம்,
உங்களுடன் சாரணர் சேவையில்,

**ஒப்பம் : கேர்ணல் பத்மலால் பெரேரா**
**தேசிய பயிற்சி ஆணையாளர்**

**ஒப்பம்: சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார**
**பிரதம ஆணையாளர்**

பிரதிகள்
1. தேசிய சாரணத் தலைமையகத்தின் அனைத்து ஆணையாளர்களுக்கும்
2. தலைவர்/நிறைவேற்றுக் குழுத் தலைவர்/ கௌரவ செயலாளர்/ கௌரவ பொருளாளர் - இலங்கை சாரணர் சங்கம்